பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
21 07 2025 6 45
திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது.
- நாடாளுமன்ற விவாதங்கள் அர்த்தமுள்ளதாகவும், ஆக்கப்பூர்வமானதாகவும் அமைய வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் கேட்டுக்கொண்டுள்ளார்.
- சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக திரு. மோகன் ஸ்ரீவஸ்தவா இன்று பொறுப்பேற்கவுள்ளார்.
- மக்கள் பிரச்சினைகளை திசை திருப்புவதற்காகவே உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்கள் நடத்தப்படுவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.
- உலகக் கோப்பை மகளிர் செஸ் போட்டியில் இந்தியாவின் கோனேரு ஹம்பி அரையிறுதிக்கு முன்னேறி வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<>>>

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது.

அடுத்த மாதம் 21ஆம் தேதி வரை மொத்தம் 21 அமர்வுகள் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தொடரில், தேசிய விளையாட்டு மசோதா, ஜன் விஷ்வாஸ் திருத்த மசோதா, வணிக கப்பல் மசோதா உள்ளிட்ட 17 முக்கிய மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட்டு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<>>>

நாடாளுமன்ற விவாதங்கள் அர்த்தமுள்ளதாகவும், ஆக்கப்பூர்வமானதாகவும் நடைபெறுவது, நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் செல்லும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் கூறியுள்ளார்.

மாநிலங்களவை உறுப்பினர்களுக்கான பயிற்சியை தொடங்கி வைத்துப் பேசிய அவர், இந்திய ஜனநாயகத்தில் பேச்சுவார்த்தை, விவாதம், ஆக்கப்பூர்வ செயல்பாடு ஆகியவை சிறப்பாக நடைபெற்று வருவதாக கூறினார்.

நாட்டின் வளர்ச்சிக்காக பாடுபட வேண்டிய கடமை ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் இருப்பதால் அவை ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளில் பங்கேற்பது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

அரசியல் என்பது மோதலை மட்டும் கொண்டதல்ல என்றும், தங்களது கொள்கை குறிக்கோளை நிறைவேற்ற மாற்று வழிகளில் முயற்சிக்க வேண்டும் என்றும் திரு. ஜக்தீப் தங்கர் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் சாரல் திருவிழாவை வருவாய் துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தொடங்கி வைத்தார்.

இந்த விழாவையொட்டி மலர்க் கண்காட்சி உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

சாரல் விழாவின் தொடக்கமாக நடைபெற்ற கொழுகொழு குழந்தைப் போட்டியில் வெற்றி பெற்ற 3 குழந்தகைளின் பெற்றோருக்கு பரிசு வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்ஆர். ராமச்சந்திரன், தென்காசி மாவட்டத்தை வளர்ச்சியடைந்த மாவட்டமாக மாற்றுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறினார்.

<<<<>>>>

அரசுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை திசை திருப்புவதற்காகவே உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்கள் நடத்தப்படுவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆட்சியாளர்கள் மக்கள் நலனைப் புறக்கணித்து சுயநலனை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

பொய்யான வாக்குறுதிகளை அளித்து ஆட்சிக்கு வந்த திமுக அரசு, திறமையற்ற நிர்வாகத்தால் மக்கள் பல்வேறு பாதிப்புகளை சந்தித்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம் என்ற பெயரில் தாம் மேற்கொண்ட முதற்கட்டப் பிரச்சாரப் பயணம் வெற்றியடைந்திருப்பதாகவும் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் உள்ள வனப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ‘பிளாஸ்டிக் இல்லாத வனப்பகுதி’ என்ற சிறப்பு தூய்மை இயக்கத்தின்போது சுமார் 54 டன் எடையுள்ள பிளாஸ்டிக் கழிவுகள் அகற்றப்பட்டிருப்பதாக வனத்துறை தெரிவித்துள்ளது.

மாநிலம் முழுவதும் உள்ள 46 வனக் கோட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெற்ற இந்த சிறப்பு இயக்கத்தில் வனத்துறை ஊழியர்களுடன் மாணவர்கள், உள்ளூர் மக்கள் மற்றும் தன்னார்வலர்கள் என சுமார் 12 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பங்கேற்று, வன விலங்குகளுக்கும், சுற்றுச்சூழலுக்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய கழிவுப் பொருட்கள் சேகரிக்கப்பட்டன.

இதுபோன்ற முகாம் இனி மாதம்தோறும் நடைபெறும் என்றும், வனப் பகுதிக்கு பிளாஸ்டிக் பொருட்கள் கொண்டு செல்வதை தடுக்க மாநிலத்தில் உள்ள 132 சோதனைச்சாவடிகளில் தீவிர சோதனை மேற்கொள்ளப்படுவதாகவும் வனத்துறை செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

சென்னை உயர்நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக திரு. மோகன் ஸ்ரீவஸ்தவா இன்று பொறுப்பேற்கவுள்ளார்.

ஆளுநர் மாளிகையில் இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் ஆளுநர் திரு. ஆர்.என். ரவி அவருக்கு பதவிப்பிரமானம் செய்து வைக்க உள்ளார்.

சத்தீஸ்கட் மாநிலம் பிலாஸ்பூரைச் சேர்ந்த திரு. ஸ்ரீவஸ்தவா, சத்தீஸ்கட், ராஜஸ்தான் உயர்நீதிமன்றங்களில் நீதிபதியாகவும், கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் ராஜஸ்தான் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாகவும் பொறுப்பு வகித்துள்ளார்.

ஏற்கனவே சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்த திரு. கே.ஆர். ஸ்ரீராம் ராஜஸ்தான் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக மாற்றப்பட்டுள்ளார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி தமிழக முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். மீது மிகுந்த மரியாதை வைத்திருப்பதால்தான் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கு அவரது பெயரை சூட்டி பெருமைப்படுத்தி இருப்பதாக பிஜேபி தேசிய பொதுக்குழு உறுப்பினர் திரு. அண்ணாமலை கூறியுள்ளார்.

ஈரோட்டில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், தமிழகத்தில் எம்.ஜி.ஆர்.-ஐ போன்ற அரசியல் தலைவர்கள் இனி உருவாவது சாத்தியமற்றது என்றார்.

தற்போதுள்ள அரசியல் தலைவர்கள் எம்.ஜி.ஆர்.-ஐ பின்பற்றி செயல்பட வேண்டும் என்றும் திரு. அண்ணாமலை கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

சேலம் மாவட்டத்தின் முக்கிய நீர்நிலைகளில் ஒன்றான பணமரத்துப்பட்டி ஏரியை சீரமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அப்பகுதி விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

2 ஆயிரத்து 476 ஏக்கர் பரப்பளவுள்ள இந்த ஏரி சீரமைக்கப்பட்டால் சுமார் 40 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் பாசன வசதி பெறும் என்றும் விவசாயி ஒருவர் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, கோவை, தேனி, திண்டுக்கல், தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் அடுத்த சில மணி நேரங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ஜப்பான் நாடாளுமன்றத்தின் மேலவைக்கு நேற்று நடைபெற்ற தேர்தலில் பிரதமர் திரு. **Shigeru Ishiba** தலைமையிலான ஆளும் கூட்டணி பெரும்பான்மையை இழக்கும் என்று கருத்துக்கணிப்புகள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

ரஷ்யாவின் **Kamchatka** தீபகற்ப பகுதியில் நேற்று ஐந்து முறை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 7 புள்ளி நான்காக பதிவாகியுள்ளது.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரின் கிஸ்துவார் மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினருக்கும் - தீவிரவாதிகளுக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடைபெற்று வருகிறது.

<<<<>>>>

பீஹார் மற்றும் கோவா சட்டப்பேரவைகளின் மழைக்காலக் கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது.

<<<<>>>>

மும்பையில் கொலாபா முதல் ஆரே வரையிலான சுரங்க மெட்ரோ ரயில்பாதை வரும் அக்டோபர் மாதம் முழுமையாக பயன்பாட்டிற்கு வரும் என்று மகராஷ்டிர முதலமைச்சர் திரு. தேவேந்திர பட்னவிஸ் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஆந்திராவில் நடைபெற்ற மதுபான முறைகேட்டில் ஒ.எஸ்.ஆர். காங்கிரஸ் தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான திரு. ஜெகன் மோகன் ரெட்டி ஆதாயம் அடைந்திருப்பதாக சிறப்பு புலனாய்வுக் குழு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

கிருஷ்ணகிரி – ஓசூர் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள சிக்காரிமேடு பகுதியில் வாகனங்கள் அடுத்தடுத்து மோதிய விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர். 8 பேர் காயமடைந்தனர்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக் கோப்பை மகளிர் செஸ் போட்டியில் இந்தியாவின் கோனேரு ஹம்பி அரையிறுதிக்கு முன்னேறி வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

ஜார்ஜியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் காலிறுதியில் சீனாவின் **Yuxin Song**-ஐ வென்றார்.

<<<<>>>>

ஹங்கேரி சர்வதேச மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா மேலும் ஒரு வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப் பதக்கம் வென்றது.

புடாபெஸ்டில் நடைபெற்ற இப்போட்டியின் 23 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் 60 கிலோ எடைப்பிரிவில் சுமித் வெள்ளிப் பதக்கத்தையும், 55 கிலோ எடைப்பிரிவில் அனில் மோர் வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

இப்போட்டியில் இந்தியா 3 தங்கம், 3 வெள்ளி, 4 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

<<<<>>>>

உலக ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டி இன்று எகிப்தின் கெய்ரோவில் தொடங்குகிறது.

<<<<>>>>